



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (24.6.2024) தலைமைச் செயலகத்தில், சிவகங்கை மாவட்டம், அருள்மிகு சொர்ணமூர்த்தீஸ்வரர் திருக்கோயில் திருவிழாவை முன்னிட்டு 18 ஆண்டுகளுக்குப் பிறகு 21.6.2024 அன்று தேரோட்டம் சிறப்பாக நடைபெற்றதையொட்டி ஊஞ்சனை நாட்டைச் சேர்ந்த இராமசாமி, அருணாசலம், கண்டதேவி ஊராட்சியைச் சேர்ந்த அ. முருகன், மு. ராஜ்குமார், கே.ஆர். கேசவமணி, செம்பொன்மாரியைச் சேர்ந்த கரு. ராமசாமி, முரசொலி, தென்னிலை நாடு – எழுவன்கோட்டையைச் சேர்ந்த செந்தில்நாதன், முடியரசன், வீரகுமார், கண்ணங்கோட்டைச் சேர்ந்த கணேஷ்குமார், இரவுசேரி நாட்டைச் சேர்ந்த பாலமுருகன், ரகுநாதன், கார்த்திகேயன், கதிர். செந்தூர், கோயில் குருக்கள் தாஸ் ஆகியோர் சந்தித்து நன்றி தெரிவித்தனர். உடன் கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் உள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (24.6.2024) தலைமைச் செயலகத்தில், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி 2024–2025 ஆம் ஆண்டிற்கான உயர்கல்வித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (24.6.2024) தலைமைச் செயலகத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் 2024–2025 ஆம் ஆண்டிற்கான வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (24.6.2024) தலைமைச் செயலகத்தில், சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி 2024–2025 ஆம் ஆண்டிற்கான சட்டத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (24.6.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் 2024–2025 ஆம் ஆண்டிற்கான தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (24.6.2024) தலைமைச் செயலகத்தில், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி 2024–2025 ஆம் ஆண்டிற்கான பள்ளிக்கல்வித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

### தேவையான இடங்களில் – 2 ஆண்டுகளில்

# தடுப்பணைகள் கட்ட விரைந்து நடவடிக்கை!

## பேரவையில் அமைச்சர் துரைமுருகன் உறுதி!

**சென்னை, ஜூன் 25-**

**தமிழக சட்டப் பேரவையில் பல்வேறு உறுப்பினர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில், அடுத்த இரண்டு ஆண்டுகளில் தேவையான இடங்களில் தடுப்பணைகள் கட்ட உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் குறிப்பிட்டார்.**



நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் குறிப்பிட்டதாவது:–

ஆத்தூர் பெத்தநாயக்கன்பாளையம் வடக்கு ஒன்றியம், வில்வனூரில் உள்ள வசிஷ்ட நதியின் குறுக்கே தடுப்பணை அமைப்பதற்கு முதல் நிலை ஆய்வு செய்ததில், இத்திட்டத் தளம் தடுப்பணை அமைக்க ஏதுவாக உள்ளது. இது நிலத்தடி நீர் உறிஞ்சுதல் வகைப்பாட்டில் அதிநுகர்வு பகுதியாகவும் (over exploited) நிலத்தடி நீர் செறிவூட்டு மண்டலத்தில் Highly favourable for recharge மண்டலத்திலும் அமைந்துள்ளதால், விரிவான தள ஆய்வு செய்து, மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, முன்னுரிமை அடிப்படையில் நிதிநிலைமைக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும்

இப்படி ஏற்பட்ட உடைப்புகளை சரி செய்வதற்கு நாங்கள் இரண்டு விதமான பணிகளை செய்கிறோம். ஒன்று, தற்காலிகமான பணிகள்; இன்னொன்று நிரந்தரப் பணிகள். ஆனாலும், உறுப்பினருக்காகவே, நிரந்தரப் பணியாக முடித்துத் தருவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும்.

தடுப்பணை உடைந்து 5 பேரை அடித்து சென்றுவிட்டது என்றால், அது பெரிய ஆச்சரியமாக இருக்கிறது. ஏனென்றால், தடுப்பணையில் எவ்வளவு தண்ணீர் நிற்கும்; அது எவ்வளவு என்று எனக்குத் தெரியும். ஒரு நபரைக்கூட அடித்துச் செல்லாது. ஆனால், 5 பேரை அடித்துச் சென்றுவிட்டதாகச் சொல்கிறீர்கள். இருந்தாலும், அப்படி சொன்னால்தான், weight ஆக இருக்கும் என்பதற்காக சொல்கிறீர்கள். உங்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்படும்.

பொதுவாக உறுப்பினர்கள், என்னையும் சேர்த்தே சொல்லுகிறேன். பெரிய கோரிக்கை தங்கள் தொகுதியிலே தடுப்பணைகள் அமைத்து, தண்ணீரை தேக்கி, அதை recharge செய்து விவசாயத்திற்கும், கால்நடைகளுக்கும், ஏன் குடிநீருக்கும்கூட பயன்படுத்துவதற்கு வகை செய்ய வேண்டுமென்ற எண்ணம் இருப்பதனால்தான், ஏற்கெனவே ஒதுக்கப்பட்ட நிதிநிலைகளிலிருந்து கூடுமானவரையில், இந்தத் தடுப்பணைகளைக் கட்டுவதற்கு முயற்சிக்கிறோம். ஆகையினால், முதலமைச்சர் அவர்களிடத்தில் இதுபற்றி நான் பேச இருக்கிறேன். வேறு திட்டங்கள் எழுப்பப்படாவிட்டாலும், குறிப்பாக தமிழ்நாட்டில் இந்த இரண்டு ஆண்டு காலத்திற்குள்ளாக மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிடுகிற தடுப்பணைகளையாவது கட்டி முடிக்க வேண்டுமென்று நான் முடிவெடுத்திருக்கிறேன். அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறேன்.

நான் மறுபடியும் சொல்கிறேன். இந்தத் தடுப்பணைகள் கட்டுவது தான் நம்முடைய எம்.எல்.ஏ. களுடைய கோரிக்கைகளிலே முக்கியமாக இருக்கிற காரணத்தால், எந்தெந்த தொகுதியிலே தடுப்பணைகள் கேட்கிறார்கள் என்று பார்த்து, எது சாதகமானது என்பதையும் அரசுக்கு தெரிவித்து, அவற்றை இரண்டு ஆண்டுக் காலத்திற்குள் கட்ட வேண்டுமென்று முதலமைச்சர் அவர்களிடத்திலே நான் பேசி நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொன்னேன். ஆக, இவ்வளவு தெளிவாக நான் சொன்ன பிறகும், அங்கு ஒரு தடுப்பணை கட்ட முடியுமா என்று கேட்கிறார்கள். எல்லா கேள்விகளுக்கும் இந்தப் பதிலே போதுமானது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

### கள்ளக்குறிச்சி

# விஷச்சாராய விவகாரத்தில் பா.ஜ.க.வுக்குத் தொடர்பு!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி குற்றச்சாட்டு!

சென்னை, ஜூன் 25 -

கள்ளக்குறிச்சி விஷச்சாராய மரணத்திற்கு காரணமான மெத்தனால் பா.ஜ.க. ஆளும் புதுச்சேரி மாநிலத்தில் இருந்து கொண்டு வரப்பட்டிருப்பதாகவும் விஷச்சாராய விவகாரத்தில் பா.ஜ.க.வுக்கு தொடர்பிருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதாகவும் தி.மு.க. அமைப்புச்செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தெரிவித்துள்ளார்.

சென்னை அண்ணா அறிவாலயத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த ஆர்.எஸ். பாரதி, கள்ளக்குறிச்சி விவகாரத்தில் முந்தைய ஆட்சியாளர்களைப்போல் பிரச்சினையை மூடி மறைக்கப் பார்க்காமல், ஆட்சியர் மற்றும் காவல்துறை அதிகாரிகளை சஸ்பெண்ட் செய்து, சம்பவத்தை விசாரிப்பதற்காக கமிஷன் அமைத்ததோடு வழக்கை சி.பி.சி.ஐ.டி.க்கு மாற்றி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அதிவேக உத்தரவு பிறப்பித்ததாக கூறினார்.

கள்ளக்குறிச்சி சம்பவத்தில் எடப்பாடி பழனிசாமியும் பா.ஜ.க.வினரும் அரசியல் ஆதாயம் தேடுவதாகவும் அ.தி.மு.க. ஆட்சியில் கள்ளச்சாராயமே இல்லாதது போல் எடப்பாடி பழனிசாமி முழு பூசணிக்காயை சோற்றில் மறைக்கப் பார்ப்பதாகவும் ஆர்.எஸ். பாரதி குற்றம் சாட்டினார்.



**புதுச்சேரியிலிருந்து மெத்தனால் கடத்தல்!**

கள்ளக்குறிச்சி விவகாரத்தில் பா.ஜ.க.வினருக்கு தொடர்பிருப்பதாக சந்தேகிக்கப்படுகிறது பா.ஜ.க.வினர் சி.பி.ஐ. விசாரணை கோருவதில் அரசியல் நோக்கம் உள்ளது கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி குற்றச்சாட்டியுள்ளார்.

விஷச் சாராய மரணங்களுக்கு காரணமான மெத்தனால், பா.ஜ.க. ஆளும் புதுச்சேரியில் இருந்து கொண்டு வரப்பட்டிருப்பதாக கூறிய ஆர்.எஸ்.பாரதி, இதில் பா.ஜ.க.வைச் சேர்ந்தவர்களுக்கு தொடர்பிருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதாக தெரிவித்தார். சி.பி.சி.ஐ.டி. நியாயமான முறையில் விசாரித்து வருவதாகவும், அ.தி.மு.க.வினரும், பா.ஜ.க.வினரும் சி.பி.ஐ. விசாரணை கோருவது அரசியல் நாடகம் என்றும் அவர் கூறினார்.

### தலா ரூபாய் 1 கோடி நஷ்டஈடு கேட்டு

# மருத்துவர் ராமதாஸ் - அன்புமணி ராமதாசுக்கு நோட்டீஸ்!

## கழக எம்.எல்.ஏ.க்கள் உதயசூரியன் - வசந்தம் கார்த்திகேயன் நோட்டீஸ்!

சென்னை, ஜூன் 25 –

கள்ளக்குறிச்சி சம்பவத்தில் கழக அரசு கடும் நடவடிக்கை எடுத்தும் கற்பனையாக, பொய்யாக அவதூறு பரப்புவதா? எனக் கேட்டு பா.மா.க. நிறுவனத் தலைவர் மருத்துவர் இராமதாசு மற்றும் மருத்துவர் அன்புமணி ராமதாஸ் ஆகியோர் மீது கழக எம்.எல்.ஏ.க்கள் உதயசூரியன், வசந்தம் கார்த்திகேயன் ஆகியோர் ஒரு கோடி ரூபாய் நஷ்டஈடு கேட்டு நோட்டீஸ் அனுப்பியுள்ளனர்.

கள்ளக்குறிச்சி விஷச்சாராய மரணங்கள் தொடர்பாக வெளியிட்ட அறிக்கைகளுக்காகப் பா.ம.க. நிறுவனத் தலைவர் மருத்துவர் இராமதாசு மற்றும் தலைவர் மருத்துவர் அன்புமணி ராமதாஸ் ஆகியோருக்குத் தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் டி.உதயசூரியன் (சங்கராபுரம் தொகுதி) மற்றும் வசந்தம் கார்த்தி கேயன் (ரிஷிவந்தியம் தொகுதி) ஆகியோர் பி.வில்சன் அசோ சியேட்ஸ் மூலமாக வழக்கறிஞர் நோட்டீஸ் அனுப்பியுள்ளனர்.

மருத்துவர் இராமதாசு, மருத்துவர் அன்புமணி இராமதாசு இந்த நோட்டீஸைப் பெற்றுக்கொண்ட 24 மணி நேரத்துக்குள், ஏதேனும் ஒரு முன்னணித் தமிழ், ஆங்கில நாளேட்டின் ஒரு பதிப்பின் வாயிலாகவும் தங்கள் சமூக வலைத்தளப் பக்கங்களின் வாயிலாகவும் தங்களிடமும் கள்ளக்குறிச்சி மக்களிடமும் நிபந்தனையற்ற மன்னிப்பு கோர வேண்டும்.

தமிழ்நாடு முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்குத் தலா ஒரு கோடி ரூபாயை இழப்பீடாக வழங்க வேண்டும்.

இந்த நோட்டீசில் குறிப்பிடப்பட்டுள்ளது போன்றோ வேறு வகையிலோ பொய்யான, ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை வைப்பதை நிறுத்திக்கொள்ள வேண்டும் எனச் சட்டமன்ற உறுப்பினர்கள் உதயசூரியன், வசந்தம் கார்த்திகேயன் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

